No.C. 15/2026 27.08.2026

# “படைப்பைப் பாதுகாத்தல்” ஞாயிறு 20.09.2026

**அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே,**

“படைப்புகளின் பெருமையினின்றும் அழகின்றும் அவற்றைப் படைத்தவராகிய” (சாஞா 13:5) தன்னைக் கண்டுணர அழைக்கும் நம் கடவுளின் அன்பும் அருளும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

நம் மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் 2015ஆம் ஆண்டு மே 24, பெந்தக்கோஸ்து பெருவிழாவன்று வெளியிட்ட ‘இறைவா, உமக்கே புகழ்’ என்னும் நம் பொதுவீடான பூமியைப் பேணுதல் பற்றிய திருத்தூது மடலின் நினைவாக ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதம் முதலாம் நாள் முதல் அக்டோபர் நான்காம் நாள், அசிசி நகர் புனித பிரான்சிஸ் விழா வரை ‘படைப்பின் காலமாகச்’ சிறப்பிக்க அழைப்புவிடுத்தார். செப்டம்பர் முதல் நாளோடு ‘படைப்பைப் பேணுவதற்கான உலக இறைவேண்டலின் நாளாகத்’ தொடங்கும் இக்காலம், நாம் கடவுள் தந்த பூமி என்னும் பெருங்கொடைக்காக நன்றி கூறுவதையும், இப்பூமியைப் பேணுவதையும் காப்பதையும் பற்றிய விழிப்புணர்வு பெறுவதையும், படைப்பைக் காக்க நம்மை அர்ப்பணிக்கத் தூண்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

படைப்பின் காலத்தில் ஏதேனும் ஒரு ஞாயிறன்று ‘படைப்பைப் பாதுகாத்தல்’ திருப்பலிக் கொண்டாடப்பட வேண்டுமென்ற திருத்தந்தை லியோவின் அழைப்பை ஏற்று, தமிழ்நாடு ஆயர் பேரவை செப்டம்பர் மாதத்தின் மூன்றாம் ஞாயிறன்று அதனைச் சிறப்பிக்கச் சென்ற ஆண்டு நம்மைப் பணித்தது. அதன்படி இந்த ஆண்டு நாம் செப்டம்பர் 20, ஞாயிறன்று ‘படைப்பைப் பாதுகாத்தல்’ திருப்பலியைச் சிறப்பிக்கின்றோம். இவ்வாண்டின் மையச் சிந்தனையாக “அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள்” (எசா 2:4) என்னும் இறைவார்த்தையைத் திருத்தந்தை நமக்குத் தந்துள்ளார்.

புனித கன்னி மரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவான ஆகத்து 15 அன்று வெளியிட்ட தன்னுடைய செய்தியில், இக்காலத்தில் நாம் முன் எப்போதும் இல்லாத வகையில் மனித வாழ்வுக்கெதிரான பல நெருக்கடிகளையும் துயரங்களையும் காண்கிறோம் எனக் கூறுகின்ற திருத்தந்தை, படைப்பின் ஒருங்கிணைந்த சமநிலையில் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது எனவும் கவலையை வெளிப்படுத்துகின்றார். “அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்” (யோவா 14:27)

என்றுரைத்த இயேசு கொணர்ந்த அமைதிக்கு எதிராக இக்காலத்தில் போர்கள் பல முன்னெடுக்கப்படுகின்றன. அவை பேரழிவுகளையும், உயிரிழப்பையும், குடும்பங்களின் சிதைவுகளையும், மக்களின் புலப்பெயர்வையும் உருவாக்குகின்றன. இது வெறுமனே மனிதரோடு நின்று விடுவதல்ல. மாறாக, சூழல் மண்டலங்களை அழித்து காற்று, நீர் போன்ற இயற்கை வளங்களைப் பாழாக்கி உணவுப் பாதுகாப்பையும் சிதைக்கின்றன. மனித வரலாற்றில் அழிக்க முடியாத காயங்களை ஏற்படுத்துகின்றன.

இந்நிலையில் மேற்கூறிய மனித வாழ்வுக்கும் இயற்கைக்கும் எதிரான நெருக்கடிகள் நம்மைப் பொறுப்புணர்வுக்கும், அதைவிட மனமாற்றத்திற்கும் அழைக்கின்றன. “வாள்களைக் கலப்பைக் கொழுக்களாக” என்னும் இறைவாக்கினரின் அழைப்பு நாடுகளுக்கு மட்டுமல்ல; ஒவ்வொரு தனிமனிதருக்கும் விடப்படுகின்றது. மனித வாழ்வுக்கும் கடவுளின் படைப்பிற்கும் ஊறு செய்யாமல் வாழவே இது அழைக்கிறது. வன்முறைக்கும் போர்களுக்கும் பதிலாக அமைதிக்காக உழைக்கவும், அன்பின் நாகரிகத்தைக் கட்டி எழுப்பவும், அதனால் சூழல் மண்டலங்களை அழிவுறாமல் பாதுகாக்கவும், இயற்கைக்கும் மனித வாழ்வுக்குமான நல்லுறவை உருவாக்கவுமே அழைக்கிறது. எனவே, பாலை நிலத்திற்குப் பதிலாகப் பசுந்தோட்டத்தையும், பிரிவினைக்குப் பதிலாக ஒன்றிப்பையும், வன்முறைக்குப் பதிலாக அமைதியையும் உருவாக்க உழைப்போம் என தன் செய்தியில் அழைப்பு விடுக்கிறார் திருத்தந்தை.

அன்பு மக்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்கள் நாம் அரசுகளாலும் மனிதராலும் இரக்கமின்றி முன்னெடுக்கப்படும் இயற்கைப் பேரழிவுகளைக் கவலையோடு காண்கின்றோம்; செய்வதறியாது திகைக்கின்றோம். கட்டுப்பாடின்றித் தகர்க்கப்படும் மேற்குத் தொடர்ச்சி மலை, கனிம வளம் எனும் பதாகையின்கீழ் ஆழமாகவும் அகலமாகவும் அகழப்படும் கடற்கரை மணல், விரைவுச் சாலைக்காகக் கொல்லப்படும் நூற்றுக்கணக்கான நீர்நிலைகள், கழிவுகள் கொட்டப்படும் ஆறுகள், குளங்கள் என இயற்கைக்கு எதிராக நிகழும் பாவச்செயல்கள் இன்னும் பலவற்றைப் பட்டியலிடலாம். அண்மையில் ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கும் கனிமவளச் சட்டத்திருத்த மசோதாவும் பெருநிறுவனங்கள் தடையின்றி இயற்கை வளங்களைச் சுரண்டுவதற்கு வழிவகுக்கும் எனச் சூழலியல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் கடவுளின் கொடையான படைப்பைப் பாதுகாக்க நாம் சயமங்கள் கடந்து ஒருங்கிணையவும் செயல்படவும் வேண்டிய அவசரத் தேவை எழுகிறது. அதே வேளையில் நாம் வாழும் இடங்களில் சூழல் மண்டலங்களைப் பாதுகாக்க தனிமனிதராகவும் குடும்பமாகவும் இயக்கமாகவும் பங்களவிலும் எளிய, சிறிய நேர்நிலைச் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே இக்காலம் நமக்கு விடுக்கும் அழைப்பாகும். அதற்கு இப்படைப்பின் காலம் பெரிதும் உதவும் என நான் நம்புகின்றேன்.

**நாம் என்ன செய்யலாம்?**

- ✪ நம் பங்கில் 'சூழலியல் பணிக்குழு' விரைவில் உருவாக்கலாம்.
- ✪ திருத்தந்தை பிரான்சிஸ் தந்த 'இறைவா, உமக்கே புகழ்' (Laudato Si) என்னும் திருத்தூது மடலை வாசித்து, பரவலாக்கம் செய்யலாம். அதில் திருத்தந்தை தந்துள்ள 'சுற்றுச்சூழல் கல்வியும் ஆன்மீகமும்' பற்றி நம் பங்கின் சிறுவர், இளைஞர், பிற பங்கேற்பு அமைப்புகளுக்கு பயிற்சிகள் தரலாம்.
- ✪ நம் பங்களவிலோ அல்லது சகோதர சபையினர், சமயத்தவரோடு இணைந்து விழிப்புணர்வு பேரணி நடத்தலாம்.
- ✪ நம் ஆலய வளாகத்தைப் பசுமை வளாகமாகவும் பங்கினைப் பசுமைப் பங்காகவும் மாற்றத் திட்டமிட்டுச் செயல்படலாம்.
- ✪ மாதத்திற்கொருமுறை அல்லது ஓரிரு மாதங்களுக்கு ஒருமுறை நம் சுற்றுப்புறத்தை, அருகிருக்கும் நீர் நிலைகளை, கடற்கரையை பங்குமக்களாக இணைந்து தூய்மை செய்யலாம்.
- ✪ காலநிலை மாற்றத்தின் கோரமான விளைவுகளை நாம் சந்தித்துவரும் இக்காலக்கட்டத்தில் நம் பங்குகளில் மரக்கன்றுகள் நடுவதையும் பரிசளிப்பதையும் ஒரு பண்பாடாக உருவாக்கலாம்.

இன்னும் பல செயல்பாடுகளை நம் பங்குகளுக்கு இயன்றவரையில் நாம் முன்னெடுக்கலாம்.

நம் மறைமாவட்டச் சூழலியல் பணிக்குழு எதிர்வரும் செப்.13, ஞாயிறு பிற்பகல் 3 மணிக்குத் தடிக்காரன்கோணத்தின் கிளைப்பங்கான பரளியாறில் என் தலைமையில் 'படைப்பைப் பாதுகாத்தல்' திருப்பலியையும் இயற்கைசார் நிகழ்வுகள் சிலவற்றையும் நடத்துகின்றது. இயன்றவர்கள் இதில் பங்கேற்கவும், நம் பங்குகளில் செப். 20, ஞாயிறன்று 'படைப்பைப் பாதுகாத்தல்' திருப்பலியும் இயற்கைசார் நிகழ்வுகளையும் மறவாமல் நடத்தவும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

கதிரவனை ஆடையாக அணிந்தும், நிலாவைக் காலடியில் கொண்டும், பன்னிரு விண்மீன்களை தலைமீது சூடியும் வானில் அடையாளமாகத் தோன்றிய அனைவருக்கும் தாயான கன்னி மரியா காயமுற்றிருக்கும் நம் புவியைக் காப்பாற்றும் நம் பணிகளில் உடனிருப்பாராக!

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**
(கோட்டாறு மறைமாவட்டம்)